இணைப்பு.

[11 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 670 (8714)-க்கான விடையைக் காண்க.]

தமிழகத்திற்கு முக்கிய பிரமுகர்கள் வருகின்றபோது அவர்களின் பாதுகாப்பை கருத்தில்கொண்டு அவர்கள் செல்லும் வழியில் முக்கிய இடங்களில் சவுக்குக் கட்டையால் தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. சென்னை மாநகரில் அண்ணாசாலை, காமராஜர் சாலை போன்ற மிக முக்கியமான சாலைகள்தான் மிக முக்கியமானவர்கள் வருகையின்போது பயன்படுத்தப்படுகின்றன. இச்சாலைகளில் சில இடங்களில் நடைபாதைகளில் நிரந்தர தடுப்பு வேலிகள் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளன.

முக்கிய பிரமுகர்கள் வருகையின்போது அவர்கள் செல்லும் வழியிலுள்ள முக்கியமான சாலைகளின் சந்திப்புகளில் சவுக்குக் கட்டையால் தடுப்பு வேலிகள் தேவைக்கு ஏற்றவாறு அவ்வப்போது அமைக்கப்படுகின்றன. எந்த சாலைகளில் நிரந்தரமாக அமைப்பது என்பது பெரிய பிரச்சினையாகிவிடும். சென்னையில் சில முக்கிய சாலைகளான அண்ணாசாலை, காமராஜர் சாலை, மவுண்ட் சாலையையும் அடையாற்றையும் இணைக்கும் வல்லபாய் படேல் சாலை ஆகியவற்றைக்கூட நிரந்தர தடுப்புகளால் இணைப்பது ஏறக்குறைய 25 கி.மீ. நீளம் ஆகிவிடும்.

தற்போது சென்னை விமான நிலையத்தில் வரவேற்பு மண்டபத்தை ஒட்டிய பகுதிகளில் நிரந்தர தடுப்பு வேலிகளுக்கு வகை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே அனைத்து சாலைகளிலும் நிரந்தர தடுப்பு வேலிகள் அமைக்க செலவினம் அதிகம் ஆகும் என்பதோடு அவைகள் முறையே பராமரிக்கப்பட்டு ஒவ்வொரு வருகையின்போதும் மீண்டும் மீண்டும் சீரமைக்கப்படவேண்டிய அவசியமும் உள்ளது. விமான நிலையத்திற்கும் கிண்டி ரயில்வே நிலையத்திற்கும் இடையேயுள்ள மவுண்ட் சாலை வேண்டுமானால் பக்கத் தடுப்புகளால் நிரந்தரமாகத் தடுக்கப்படலாம். இதுபற்றித் தீவிரமாக பரிசீலிக்கப்படும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS